சேப்பாக்கம்
20 JAN 2025
000062
சென்னை
பணிமனை மற்றும் பண்டகசாலை

க.கா.பொ.
உ.செ.பொ.
க.கா.1

செயற்பொறியாளர் மற்றும் பொதுக்கண்காணிப்பாளர் அலுவலகம், நீர்வளத்துறை, பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை, சேப்பாக்கம், சென்னை–5.

**முன்னிலை :** பொறி.பா.வடிவேல், எம்.இ.,
செயற்பொறியாளர் (ம) பொதுகண்காணிப்பாளர்(முகூபொ), நீ.வ.து.

**செயல்முறை ஆணை எண். நி1 / 1576 / 2022–நமு (10ஆ), நாள். 09.01.2025.**

பொருள்: நியமனம் – நீர்வளத்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. க.மோகன், இன்ஸ்ட்ருமெண்ட் மெக்கானிக் தரம்–1 (Skilled Assistant Gr.I) என்பவரது மகள் **திருமதி. M. மாலதி,** அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமன ஆணை வழங்கப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணியேற்பு – **இளநிலை உதவியாளர்** பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்.

பார்வை:
1. முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீ.வ.து., சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்3(2) / 23190 / 2022, நாள். 25.07.2022.
2. தலைமைப் பொறியாளர் நீவது., இயக்கம் (ம) பராமரிப்பு, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் செயல்முறை ஆணை எண். எ2 / 4482 / 2021, நாள். 01.08.2022.
3. கண்காணிப்புப்பொறியாளர், நீ.வ.து., பணிமனை மற்றும் பண்டகசாலை வட்டம், சேப்பாக்கம், சென்னை– 5 அவர்களின் மேற்குறிப்பாணை எண். ஆ1 / 1111 /2021, நாள். 01.08.2022.
4. செயற்பொறியாளர் மற்றும் பொதுக்கண்காணிப்பாளர் அலுவலகம், நீர்வளத்துறை, பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை, சென்னை–1 அவர்களின் செயல்முறை ஆணை எண். நி1 / 1576 / 2022, நாள். 02.08.2022, 05.09.2022.
5. அரசாணை (நிலை) எண். 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (Q1) துறை நாள். 08.03.2023.
6. தலைமைப் பொறியாளர் நீவது., இயக்கம் (ம) பராமரிப்பு மற்றும் மாநில அணை பாதுகாப்பு அமைப்பு, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் கடித எண். எ2 / 5277 / 2023, நாள். 04.10.2024.
7. கண்காணிப்புப்பொறியாளர், நீ.வ.து., பணிமனை மற்றும் பண்டகசாலை வட்டம், சேப்பாக்கம், சென்னை– 5 அவர்களின் கடித எண். ஆ1 / 1277 /2023–2, நாள். 09.10.2024.

*********

**ஆணை :**

பார்வை (1) முதல் (4) வரை காணும் செயல்முறை ஆணைகளின்படி, காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு க. மோகன், இன்ட்ரூமெண்ட் மெக்கானிக் தரம்–I (Skilled Assistant Gr.I) என்பவரின் மகள் **திருமதி. M.மாலதி,** என்பவரை கருணை அடிப்படையில் **தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 (தமிழ்நாடு சட்டம் 14 / 2016)ல் உள்ள பிரிவில் 17(1)–ன்படி** தமிழ்நாடு அமைச்சுப் பணிகளின் கீழ் தற்காலிகமாக இளநிலை உதவியாளர் பதவிக்கு சம்பள ஏற்ற முறை நிலை 8/ ரூ.19500–62000/ல் நியமிக்கப்பட்டு, இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னை–1, பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை, செயற்பொறியாளர்

மற்றும் பொதுக்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் **03.08.2022** முற்பகல் இளநிலை உதவியாளராக பணியேற்றுள்ளார்.

இதன் தொடர்ச்சியாக, பார்வை (6) மற்றும் (7)–ல் காணும் கடிதங்களின் தெரிவித்துள்ளவாறு, பார்வை (5)–ல் காணும் அரசாணையின் பின்னிணைப்பிலுள்ள அறிவிப்பின் **விதி 16 மற்றும் 17–ன்படி, திருமதி.M.மாலதி,** இளநிலை உதவியாளர் அவர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

1. தனியரது பணிப்பதிவேடு மற்றும் மதிப்பெண் பட்டியலை சரிபார்த்ததில், தனியர் இளநிலை உதவியாளர் பதவிக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியான **எஸ்.எஸ்.எல்.சி. (பத்தாம் வகுப்பு)**–யில் தேர்ச்சி பெற்றுள்ளார். அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களின் ந.க.எண்.0059/அ3/2021 நாள்.0405.2021–ல் தனியரின் இடைநிலைப் பள்ளி கல்விச் சான்றிதழ் உண்மைத் தன்மை பெறப்பட்டுள்ளது.
2. **திருமதி.M.மாலதி,** அவர்களின் பணிப்பதிவேடு மற்றும் பதிவுரு தாட்களை ஆய்வு செய்ததில் இளநிலை உதவியாளர் பதவியின் பணிக்காலத்தில் தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கைகளோ, புகார் மனுக்களோ, குற்றச்சாட்டுக்களோ ஏதும் நிலுவையில் இல்லை எனவும், தண்டனைகள் ஏதும் பெற்றிருக்கவில்லை எனவும் சான்றளிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகுதிகளின் அடிப்படையில், **திருமதி.M.மாலதி,** அவர்களுக்கு இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான **03.08.2022 முற்பகல்** முதல் **தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 (தமிழ்நாடு சட்டம் 14 / 2016) பிரிவு 28(1)ன்படி** 'இளநிலை உதவியாளர்' பதவியில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், **திருமதி.M.மாலதி,** அவர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான **03.08.2022 முற்பகல்** முதல் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இவர்தம் தகுதிகாண் பருவம் தொடங்கிய நாளிலிருந்து மூன்றாண்டு காலத்தொடர் பணியில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை முடிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப் பெறுகிறார்.

தகுதிகாண் பருவக் காலத்திற்குள் தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்களுக்கான தமிழ்நாடு குடிமைப்பணி பயிற்சியில் அதாவது பவானி சாகர் அடிப்படையில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், இப்பயிற்சியில் தேர்ச்சி பெற்ற பின்னரே தனியரது தகுதிகாண் பருவம் நிறைவு செய்ததற்கான ஆணை வழங்கப்படும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(ஒம்/–) பொறி.பா.வடிவேல், 09.01.2025.
செயற்பொறியாளர் மற்றும் பொதுகண்காணிப்பாளர்,
நீர்வளத்துறை,
பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை,
சேப்பாக்கம், சென்னை–600 005.

பெறுநர்

திருமதி. M.மாலதி, இளநிலை உதவியாளர்,
செயற்பொறியாளர் மற்றும் பொதுகண்காணிப்பாளர் அலுவலகம்,
நீர்வளத்துறை, பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை,
சேப்பாக்கம், சென்னை–600 005.

நகல்: முதன்மை தலைமைப் பொறியாளர், மற்றும் தலைமைப்பொறியாளர் நீர்வளத்துறை, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: தலைமைப் பொறியாளர், நீர்வளத்துறை, இயக்கம் மற்றும் பராமரிப்பு மற்றும் மாநில அணை பாதுகாப்பு அமைப்பு, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: கண்காணிப்புப்பொறியாளர், நீர்வளத்துறை, பணிமனை மற்றும் பண்கடசாலை வட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

9.4.25

செயற்பொறியாளர் மற்றும் பொதுகண்காணிப்பாளர்(முகூபொ),
நீர்வளத்துறை,
பொதுப்பணி பணிமனை மற்றும் பண்டகசாலை,
சேப்பாக்கம், சென்னை–600 005.